## ரீல்ஸ் செய்து ஆட்சிக்கு வந்தவர்கள் – பொய்களையே பேசுகிறார்கள்!

# சட்டமன்றத்தை சினிமா படப்பிடிப்பு தளமாக மாற்றிவிட்டார்கள்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் தாக்கு!

**புதுக்கோட்டை, செப்.6**

**புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட மாலையீடு அருகே புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் தலைமை கழக பிரதிநிதிகள் ஏ.கே.எஸ். விஜயன், மதுரை பாலா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சரும் திருமயம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார்.**

அப்போது அவர் கூறுகையில்:

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு அவரது வீட்டை ஆட்கள் வைத்து சுத்தம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. லஞ்ச ஒழிப்புத்துறை வீட்டை சுத்தம் செய்து கொடுத்து விட்டு போய்விடுவார்கள். எத்தனை முறை தான் அவர் வீட்டை சோதனை செய்வார்கள். தற்போது சோதனையில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சுத்தம் செய்து தண்ணீர் ஊற்றி கழுவி கொடுத்துவிட்டு போய்விடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

### ஜனநாயகப் படுகொலை!

சட்டமன்றத்தில் பேசினால் தவறு என்று சொன்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஜனநாயக படுகொலை என்று சொல்வார்கள் அதைத்தான் தவெக அரசு எதிர்க்கட்சியின் குரல்வலைகளை நசுக்கி வருகிறது.

சட்டமன்றத்திற்கு செல்வது சட்டமன்றத்தில் உரையை கேட்பது உரை நிகழ்த்துவது கேள்விகள் கேட்பது எங்களின் விருப்பம். எத்தனை மணி நேரம்தான் இருக்க வேண்டும் வெளியே ஓடக்கூடாது என்றெல்லாம் எங்களை நிர்பந்தப்படுத்த முடியாது.

சட்டமன்றத்தில் எங்களை ஓடக்கூடாது என்று சொல்லிவிட்டு ஓடி காண்பித்தவர் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தான். அன்று ஓடியதை அனைவரும் பார்த்திருப்பீர்கள். சினிமாவில் அவர் ஓடுவதைப் போல் ஓடியுள்ளார்.

நாங்கள் சட்டமன்றத்தை பார்க்கவில்லை. சினிமா படப்பிடிப்பு தளத்தை தான் பார்த்து வருகிறோம். ஒரே பக்கமாக. திமுகவை எந்த அளவு சேதப்படுத்துவது என்று சட்டமன்ற தொலைக்காட்சி மூலமாக பார்க்கிறார்கள். ஆனால் திமுக உறுப்பினர்கள் அதனைத் தவிடு பொடியாக்கி திமுக சட்டமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய ஜனநாயகத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

### ஜனநாயகத்தை காப்பாற்றும் தி.மு.க.!

இங்கிருந்து அவரை கிளப்புவதற்கு தவெக எம்.எல்.ஏ.க்கள் பார்க்கிறார்கள் அவர் கிளம்ப முடியாது. இங்கே ரீல்ஸ் செய்துதான் ஆட்சிக்கு வந்தனர் எந்தவித சாதனையும் செய்து ஆட்சிக்கு வரவில்லை. பொய்யான தகவல்களை பரப்பினார்கள். இவர் வந்தால் பாலாறும் தேனாறும் ஓடும் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் நூறு நாட்களில் 45 ஆயிரம் கோடி கடன் வாங்கி இருப்பது தான் இந்த ஆட்சியில் சாதனையை தவிர வேறு எதுவும் இல்லை. இதில் எந்த செலவும் ஆக்கபூர்வமாக செய்யவில்லை. எங்களை கடன் வைத்து சென்றுவிட்டனர் என்று கூறினார்கள் ஆனால்

எங்களை போல் பல மடங்கு கடன் வாங்குகிற ஆட்சி தான் தற்போதைய தவெக ஆட்சி.

ஒரு திட்டத்தை அறிவிப்பார்கள். ஆனால் அந்த திட்டம் எங்கு நிறைவேற்றுவார்கள் என்று சொல்ல மாட்டார்கள். 20 லட்சம் சதுர அடியில் ஒரு சதுர அடி 6000 ரூபாய் மதிப்பில் 1200 கோடி ரூபாயில் புதிய சட்டமன்றம் கட்டப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் எந்த இடம் என்று சொல்ல மாட்டார்கள். செம்மஞ்சேரியில் ஸ்போர்ட் சிட்டி அடிப்படை செலவெல்லாம் செய்து தயார் செய்தும் , ஆனால் அதை அவர்கள் ரத்து செய்துவிட்டனர். தற்போது அவர்கள் குளோபல் ஸ்போர்ட்ஸ் ஒலிம்பிக் சிட்டி உருவாக்கப் போகிறோம் என்று கூறுகிறார் கள். எந்த இடம் என்று சொல்ல மாட்டார்கள். மர்மமாக வைத்திருப்பார்கள் அவர்களுக்குத்தான் அது தெரியும்.

### தண்டச் செலவு செய்யும் த.வெ.க. அரசு!

இந்தியாவிலேயே கார் ரேஸை எங்கள் ஆட்சி தான் தமிழ்நாட்டில் நடத்தியது. ரூ.18 கோடி செலவு செய்ததாக சொன்னார்கள். ஆனால் தற்பொழுது ரூ.300 கோடி செலவு செய்து கார் ரேஸ் நடத்தப் போவதாக தெரிவித்துள்ளனர். எது தண்டசெலவு.

உலகத்துக்கே தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கிறது என்று நாங்கள் அப்போது கூறியதை தற்போது இந்த அரசு நிலைநாட்டி வருகிறது. நாங்கள் நடத்தியதை குற்றம் சுமத்திவிட்டு அவர்கள் அதையே கொண்டு வருகிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் கொண்டு வரும் இடங்களை கூட அவர்கள் சொல்வது கிடையாது.



பரந்தூர் விவகாரத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளை அவர்கள் முன்வைக்கின்றனர். பரந்தூரில் விமான நிலையம் வராது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து விட்டார். உடனடியாக அமைச்சர் ஆதவ் அர்ஜூன் பரந்தூர் என்று கூகுள் மேப்பில் தேடினால் ஜிஸ்கொயர் என்று வருகிறது என்று தெரிவித்துள்ளார். ஆனால் பரந்தூர் என்று தேடினால் விமான நிலையத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இடம் என்று தான் வருகிறது.

விமான நிலையத்திற்கு நான்கு இடம் தேர்வு செய்யப்பட்டது. ஒன்றிய அரசின் சிவில் ஏவியேசன் பரந்தூர் தான் சரியான இடம் என்று அவர்கள் தான் தேர்வு செய்தனர்.

### சட்டப்பேரவையிலேயே பொய் சொல்கிறார்கள்!

சட்டமன்றத்திலேயே பொய் சொல்கின்றனர். ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஜேகே டயர் நிறுவனம் என்று கூறுகிறார் அப்படி ஒரு நிறுவனமே இல்லை அதற்கு தொழில்துறை அமைச்சர் எழுந்து பதில் கூறுகிறார்.

ரீல் ஆட்சியை த.வெ.க. அரசு நடத்தி வருகிறது ரியல் ஆட்சி நடத்தவில்லை.

சட்டமன்ற நிகழ்வுகள் ஒளிபரப்பில் பாரபட்சமாக ஒளிபரப்புகின்றனர் என்பது சாமானிய மக்களுக்கும் கூட தெரியும். தி.மு.க.வை டேமேஜ் செய்ய வேண்டும் என்று எண்ணி நேரலை ஒளிபரப்புகளை செய்கின்றனர். ஆனால் டேமேஜ் ஆவது தவெக தான். திமுக இல்லை. சட்டமன்றத்தில் தமிழ்நாடு மக்களின் குரலாக ஒழித்து வருகிறோம்.

தவெக பல பொய்களை பரப்பி மக்களை நம்ப வைத்து வருகிறது. தமிழ்நாடு பின்னோக்கி செல்கிறது. நமக்குரிய தொழிற்சாலைகள் மற்ற மாநிலங்களுக்கு செல்கிறது. ஜிடிபி குறைந்து வருகிறது. நாங்கள் கொண்டு வந்த gdpயில் பாதி கூட அவர்களால் கொண்டுவர முடியாது. இரண்டாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு பதினேழாவது இடத்திற்கு சென்று விட்டது.

உயர்நீதிமன்ற கோரிக்கைகளின் கட்டமைப்பு வசதியை வைத்து எந்தெந்த பகுதியில் எல்லாம் நீதிமன்றம் தேவையோ அந்தந்த பகுதிகளுக்கு நீதிமன்றம் அப்போது அமைத்து கொடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது நீதிமன்றத்தை மூடுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாகத்தான் அர்த்தம். எந்த நீதிமன்றத்திலேயும் வழக்கில்லை. அதனால் நீதிமன்றத்தை மூடுகிறோம் என்றெல்லாம் சொல்ல முடியாது. எங்களது ஆட்சியில் சட்டமன்றத்தில் என் துறை சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டுமே நான் பதிலளித்தேன். மற்ற எதற்கும் நான் பதில் சொல்லவில்லை. எங்களுடைய முதலமைச்சர் கேட்கும் கேள்விகளுக்கு உடனடியாக பதில் அளிக்கக்கூடிய ஆற்றல் மிகு முதலமைச்சராக இருந்தார்.

### அவைத்தலைவரின் நடிப்பு!

சட்டப்பேரவைத் தலைவர் அவர் சார்ந்திருக்கும் கட்சி எம்எல்ஏக்களை கண்டிப்பதை போல் கண்டிப்பார். வெளியே பார்க்கும் பொழுது அவரை நடுநிலையாக இருப்பதாக நேர்மையாக இருப்பதாக போக்கஸ் செய்து கொள்கிறார்.

இரண்டு தரப்பு பேசும் பொழுது இரண்டு தரப்பையும் அமர வைத்து விட்டு அவர்கள் கட்சி அமைச்சரை எழுந்து பேச சொல்வார். முழுக்க முழுக்க சட்டப்பேரவைத் தலைவர் நடித்து எதிர்க்கட்சியினருக்கு சாதகமாக இருப்பதைப் போல் காண்பித்து அவர்கள் கட்சியினரை தூக்கி விடுகிறார்.

சட்டமன்றத்தில் ஆதாரம் இல்லாமல் தான் பேசுகின்றனர். எங்களை பொறுத்தவரை அதனை உரிமைக் குரலுக்கு அனுப்பலாம் அதுதான் எங்களால் செய்ய முடியும்.

இசக்கி சுப்பையா அவரது பதவியை ராஜினாமா செய்த பிறகு அந்த தொகுதி காலியாகிவிட்டதாக அறிவித்துவிட்ட பிறகு மீண்டும் அந்த இடத்தில் அமர முடியாது. மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். பதவிப் பிரமாணம் எடுக்க வேண்டும் . அதன் பிறகு சட்டமன்ற உறுப்பினர் நாற்காலியில் அமர வேண்டும். ஆனால் ராஜினாமா செய்துவிட்டு சட்டப்பேரவைத் தலைவர் ஏற்றுக்கொண்டு விட்டு தேர்தல் ஆணையத்திற்கும் அனுப்பி அந்த இடம் காலி என்று அறிவித்த பிறகு நான் தான் சட்டமன்ற உறுப்பினர் என்று கேட்க யாருக்கும் உரிமை இல்லை.

### சட்டமன்ற மாண்பு சீர்கெடுகிறது!

தவெக கட்டமைப்பே இல்லாத கட்சி. கட்டமைப்பே இல்லாத கட்சி எங்கள் கட்சியை விமர்சிக்க அவர்களுக்கு எந்தவித அருகதையும் கிடையாது. திமுகவின் ஆணிவேர்கள் எங்களது கிளைக்கழகம் தான். கிளைக் கழகத்தை கட்டமைத்து அதன் மூலமாக ஒன்றியம் பகுதி நகரம், பேரூராட்சி , மாநகராட்சி மாவட்ட கழகத்தை உருவாக்க வேண்டும் என்பது எங்களது தலைவரின் விருப்பம்.

### த.வெ.க. மீது எங்களுக்கு பயம் கிடையாது!

நாங்கள் மக்களிடம் வாக்கு வாங்கி உள்ளோம். வடபகுதியில் கொஞ்சம் வாக்கு வாங்கவில்லையே தவிர எங்களுக்கும் அவர்களுக்கும் 15 லட்சம் வாக்குகள் தான் வித்தியாசம். சட்டமன்ற மாண்புகள் சீர் கெடுவதாக சமூக ஆர்வலர்கள் அரசு ஊழியர்களுக்கு இப்பதான் தெரிகிறது. வீடியோ அலுவலகத்திற்கு சென்று தவெகவினர் உடனடியாக எங்கள் பகுதிக்கு வந்து பார்வையிடுங்கள் என்று கூறுகின்றனர். அப்படி எல்லாம் அவர்களை அழைக்க முடியாது.

கிராம மக்கள் மனு கொடுத்து தான் அவர்களை அழைக்க முடியும். தவெக நிர்வாகி என்று கூறி அதிகாரிகளை அழைக்கின்றனர். அது மாதிரி அழைக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. இல்லாத அதிகாரத்தை தவெக கட்சியினர் எடுத்துக் கொண்டுள்ளனர். அதற்கு முடிவு கட்ட நிச்சயமாக ஏதோ ஒரு திட்டத்தோடு நீதிமன்றத்தை நாடுவோம்.

நாங்கள் கஜானாவை காலி செய்து சென்று இருந்தால் மகளிர் உரிமைத்தொகை காலை உணவு இதையெல்லாம் செய்ய முடியுமா? நாங்கள் கஜானாவை காலி செய்யவில்லை கரெக்ட் செய்து வைத்திருந்தோம். அதனால்தான் இதை எல்லாம் கொடுக்க முடிந்தது. இந்தத் திட்டத்திற்கு இதுதான் செலவு என்று பட்ஜெட் போட்டு ஒழுங்காக செலவு செய்தோம். ஆனால் தற்போது 1200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் என்று சொல்லியுள்ள னர் ஆனால் இடமே சொல்லவில்லை. அதேபோல் குளோபல் ஸ்போர்ட் சிட்டி எந்த இடம் என்று சொல்லவில்லை. கார் ரேஸ் எந்த ஊர்? எந்த இடம் என்று செல்லவில்லை. பரந்தூரை பறக்கவிட்டு விட்டோம். இனிமேபுதிய விமான நிலையத்திற்கு இடத்தை தேர்வு செய்து கண்டுபிடித்து ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டு வருவதற்கு இன்னும் பத்து 15 ஆண்டுகளாகும். அதற்குள் தமிழ்நாட்டிற்கு அண்டை மாநிலங்கள் டாடா காண்பித்து மேலே சென்று விடுவார்கள். கேரளா கூட டாப்பில் சென்று விடுவார்கள்.

### 2-வது இடத்திலிருந்து 17-வது இடத்தில் தமிழ்நாடு!

இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு 17வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அது 28வதுக்கு போகாமல் இருந்தால் சரி.

அத்தியாவசிய பொருட்கள் தவெக ஆட்சியில் விலை உயர்ந்துள்ளது. மின்சார கட்டணம் அதிகளவு மக்கள் கட்டி வருகின்றனர். பல மடங்கு அந்த கட்டணம் உயர்ந்துள்ளது. 200 யூனிட் மின்சாரம் இலவசமாக கொடுப்பதாக கூறி மக்களிடம் பணம் வசூலில் தவெக அரசு ஈடுபட்டுள்ளது. சொத்து வரியை ரகசியமாக இந்த அரசு உயர்த்தி உள்ளது. கேட்டால் அடுத்த முறை அட்ஜஸ்ட் செய்வதாக கூறுகின்றனர். எப்படி அட்ஜஸ்ட் செய்ய முடியும்.

ராஜினாமா செய்த பதவியை திரும்ப கேட்கும் உரிமை இல்லை என்பது இசக்கி சுப்பையாவுக்கு தெரியும். பதவி இல்லாமல் வீட்டில் இருப்பதால் போர் அடித்திருக்கும் அதனால் சட்டமன்றத்திலாவது அமரலாம் என்று எண்ணி அவர் இதுபோன்று செய்திருப்பார்.

உடனடியாக இடைத்தேர்தலை சந்தித்து தவெக சட்டமன்ற உறுப்பினராக வந்து விடலாம் என்று எண்ணி அவரது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்திருப்பார். மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. ஒரு முறை ஏமாந்து விட்டால் எப்போதும் ஏமாறுவார்கள் என்பதில்லை. இனி எந்த காலத்திலும் தமிழ்நாடு மக்களை விசில் ஏமாற்ற முடியாது. விசில் அடித்தால் தியேட்டரில் தான் அடிக்கலாம் வேறு எங்கேயும் அடிக்க முடியாது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா முன்னாள் மாநிலங்களை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மற்றும் மாநில மாவட்ட மாநகர ஒன்றிய கிளைக் கழக செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

## கழகத்தின் கொள்கை வழியை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் பல்வேறு நலஉதவிகளை வழங்கி

# கழக முப்பெரும் விழாவை எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவோம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – ஆஸ்டின் எம்.எல்.ஏ. – பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப்.6-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 5.9.2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில், மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக பிரதிநிதிகள் பேரா. ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., ஆஸ்டின் எம்.எல்.ஏ. மற்றும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



மேலும், இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், வழக்கறிஞர் தாயகம் கவி, அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே. மூர்த்தி, எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன், கே.சந்துரு, சி. மகேஷ் குமார், வே.உமாகாந்தன், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன், தேடல். புருஷோத்தமன்,

மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன், இசட். ஆசாத்,

பகுதிக் கழகச் செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, ஐ.சி. எஃப். வ. முரளிதரன், எ. நாகராஜன், கூ.பீ.ஜெயின், வே.வாசு, சொ.வேலு, எஸ்.ராஜசேகர், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், எஸ். முரளி,

பொதுக்குழு உறுப்பினர்கள்: டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ. மணி, ஏ.பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராஹீம் கனி, இரா. கலைச்செல்வி, சரிதா மகேஷ் குமார், அ. நிர்மலா தேவி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், க. வினோத், எஸ். தனசேகர், ஜி.ஜே. பிரபு, பி. ஸ்ரீராமுலு, நா. ரஞ்சித், விஜயா லயன், ஜி. தாமோதரன், கு. கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், பி. விஜயகுமார், எல். சம்பத்குமார், எம். விநாயகம், ம. அசோக் குமார், சுதா தீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி. சாந்த குமாரி மற்றும் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

### தீர்மானம் – 1

ஆகஸ்ட் 22 ஆம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையில்,

“நாம் பார்க்காத வெற்றியும் இல்லை; நாம் பார்க்காத தோல்வியும் இல்லை. தேர்தலில் தோல்வி அடைந்திருக்கிறோமே தவிர, அது நிரந்தரமானது அல்ல. கழகத்தின் எதிர்காலத்தைத் திட்டமிட நமக்குக் கிடைத்துள்ள கால அவகாசமாக இதனை எடுத்துக் கொள்வோம்” என்று குறிப்பிட்டார்.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முறை, “இந்தக் கருணாநிதியின் வாழ்வு முடிந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வு முடியாது; அதனை அதன் அமைப்புதான் காப்பாற்றும்” என்று கூறிய வரிகளைச் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையில் கழகத்தின் அமைப்பு முறையில் மிகப்பெரிய சீரமைப்பை மேற்கொண்டு, கழகத்தை மேலும் வலிமைப்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுத்து வரும் கழகத் தலைவர் அவர்களை மனமாரப் பாராட்டி, இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

### தீர்மானம் – 2

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கழக நிர்வாகச் சீரமைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், மாவட்ட, பகுதி மற்றும் வட்டக் கழகங்களின் மறுசீரமைப்பு தொடர்பாக கழகத் தலைமை மேற்கொள்ளும் அனைத்து முடிவுகளுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு, கழகத்தின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் ஒருங்கிணைந்து தீவிரமாகப் பணியாற்றுவது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

### தீர்மானம் – 3

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட நாள் ஆகிய மூன்று வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளையும் இணைத்து, “பெரியார் - அண்ணா - கழகம்” என்ற உணர்வோடு, செப்டம்பர் 15 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பது எனவும்,

மேலும், அன்றைய தினம் காலை சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் வட்டங்கள் தோறும் கழகக் கொடியேற்றி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழியை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, முப்பெரும் விழாவை எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகிறது.